2010 ஏப்ரல் 15]

நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை அந்தத் தொகைதான் வழங்கப்படுகிறது. அந்தத் தொகையை இன்னும் உயர்த்தித் தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு நாங்களும் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அதைப்போல, vulnerable points எவை என்று கண்டறிந்து, யானைகள் அதிகமாக வருகின்ற பகுதிகள் எவை என்று கண்டறிந்து அந்தப் பகுதிகளிலே அகழிகள் வெட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**48—**

**விபத்துகளைத் தடுத்தல்**

***855—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வழிபாட்டுத் தலங்களால் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலை ஓரங்களில் 542 இடங்களில் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த வழிபாட்டுத் தலங்களின் ஆக்கிரமிப்புகள், சட்டம்-ஒழுங்கு பாதிக்காதவாறு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளைக் கொண்டு அவ்வப்போது அகற்றப்பட்டு வருகின்றன. அதாவது கடந்த டிசம்பர் திங்கள் வரை 93 வழிபாட்டுத் தலங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள ஆக்கிரமிப்புகளையும் அகற்றும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மேலும், சாலையோர வழிபாட்டுத் தலங்களால் விபத்துகள் ஏதும் நிகழாவண்ணம் பார்த்துக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பொறியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் அடையாளப் பலகைகள், ஒளிரும் எச்சரிக்கைப்



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

பலகைகள், வேகத் தடைகள், அதிர்வுப் பட்டைகள் ஆகியவை அமைக்கப்பட்டு விபத்துகள் தொடர்ந்து தடுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞருடைய ஆட்சியில் சாலைகள் எல்லாம் அகலப்படுத்தப்பட்டு, சர்வதேசத் தரத்தில் வழுவழுப்பாகப் போடப்படுகின்ற காரணத்தினால், சாலை ஓரங்களில் இருக்கும் திருக்கோயில்களின் வாசல் வரை இன்றைக்கு சாலைகள் போடப்பட்டுவிட்டன. வாகன ஓட்டிகளெல்லாம் அந்தக் கோயில்களுக்கு முன்பு வாகனங்களை நிறுத்திவிட்டு வழிபடுகின்றபோது உயிர்களுக்கும், அதேபோல வாகனங்களுக்கும், சில நேரங்களில் வழிபாட்டுத் தலங்களுக்கே ஆபத்து ஏற்படுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, உடனடியாக எஞ்சி இருக்கின்ற கோயில்களையும் அப்புறப்படுத்தி, இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கு மாற்று ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே எனது விடையில் அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறேன். இடையில் நெடுஞ்சாலைத் துறையிலே பல்வேறு பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக இருந்த காரணத்தினால், ஆக்கிரமிப்புகள் அதிக அளவிலே ஏற்பட்டு இதுபோன்ற பல்வேறு சங்கடங்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு ஏற்பட்ட பிறகு, சாலைகளினுடைய அகலம் எந்த அளவு உள்ளது என்பது வரையறை செய்யப்பட்டு, நம்முடைய வருவாய்த் துறை மற்றும் சர்வே துறையினுடைய அலுவலர்களின் ஒத்துழைப்போடு இப்பொழுது எல்லைக் கற்கள் நடப்பட்டிருக்கிற காரணத்தினால், சமீபத்திலே ஆக்கிரமிப்புகள் பெருமளவில் தடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தந்த மாவட்ட நிர்வாகத்தோடு கலந்து பேசுவதோடு, பொது மக்களுக்கும் பாதிப்பு இல்லாத வகையிலே அவர்களையும் வைத்து, அவர்களுடைய சம்மதத்தோடு இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை

2010 ஏப்ரல் 15]

எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இனிமேல் ஆக்கிரமிப்புகள் அதிகம் ஏற்படாமல், இருக்கிற ஆக்கிரமிப்புகளையும் எடுப்பதற்குத் துறை நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

*முற்பகல் 10-25*

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, நமது இந்து சமய அறநிலையத் துறை ஏராளமான கோயில்களில் குடமுழுக்கு செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. நமது மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரோடு கலந்து பேசி, இது போன்ற கோயில்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, பல இடங்களில் கட்சிகளுடைய கொடிக் கம்பங்கள் மற்றும் விளம்பரப் பலகைகள் எல்லாம் ஏராளமாக சாலை விபத்துகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அரசு எப்பொழுதெல்லாம் பொறுப்பேற்கிறதோ, அப்பொழுதெல்லாம் சாலைகள் அகலமாக இருக்க வேண்டும், போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமலும் அதே நேரத்தில், விபத்துகள் ஏற்படாவண்ணமும் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதன் அடிப்படையிலேதான் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், சாலையின் இடையிலே அவ்வப்போது உருவாகிற கோயில்களை எச்சரிக்கை செய்து, அப்போதே தடுக்க முன்வராத காரணத்தினால்தான் ஆக்கிரமிப்புகள் அதிகமாக ஏற்படுகின்றன. அதுவும் கோயில் என்கிற முறையிலும், பல்வேறு வழிபாட்டுத் தலங்கள் என்கிற

முறையிலும் நம்முடைய அலுவலர்களும் கொஞ்சம் ஒதுங்கிக்கொள்கிறார்கள். அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய பொதுமக்களுடைய மனதிலே ஒரு மாற்றம் ஏற்பட்டால்தான், இது போன்ற சங்கடங்களை அரசு சந்திப்பதைத் தவிர்க்க இயலும்.

இருந்தாலும் இப்போது தொடர்ந்து புதிய ஆக்கிரமிப்புகள் வராமல் பாதுகாக்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலைகள் எல்லாம் நான்கு வழிச் சாலைகளாக அகலப்படுத்த வேண்டிய நேரத்திலே, ஏற்கெனவே பட்டாக்கள் பெறப்பட்டு கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தாலும், வழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும்கூட, இப்போது அதற்கான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு, அவை உரிய முறையிலே வேறு இடத்திலே மாற்றி அமைக்கப்படுகின்றன. எனவே, மாநில நெடுஞ்சாலைகளிலே இப்போது புதிதாக விரிவாக்கம் செய்யக்கூடிய, நிகழ்வுகள் ஏற்பட்டாலும் அதனை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். எனவே, அந்தந்தப் பகுதிகளினுடைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்போல பல்வேறு அரசியல் கட்சிகளுடைய கொடிக் கம்பங்கள், மின் கம்பங்கள், விளம்பரப் பலகைகள் எல்லாம் அகற்றப்படவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எனவே, அவை தொடர்பாக தொடர்ந்து எச்சரிக்கை செய்யப்பட்டு வருவதுடன் விளம்பரப் பலகைகள் வைக்கப்படுமேயானால், முறையாக அதற்கு அனுமதி பெறவேண்டுமென்கிற உத்தரவும் வழங்கப்பட்டிருக்கிறது; அதற்கேற்ப தொடர்ந்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**49—**

**கட்டட வசதி**

***65194—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, ராஜாக்கமங்கலம் ஒன்றியம், கேசவன்புத்தன்துறை மீனவர் பகுதியில் மீன் பதப்படுத்தும் குளிர்சாதன வசதிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS